August 2019

# Coastal Watch

கடலோரப் பார்வை



## Empowering Communities

### Despite Disasters

Coastal Watch
Monthly Coastal update from ICT
Vol. I Issue 2 August 2019

**DHAN Foundation**
1A, Vaidyanathapuram East
Kennet Cross Road
Madurai 625 016. Tamil Nadu, INDIA
Tel.: +91 452 2302500; Fax: 2602247
Email: dhanfoundation@dhan.org

Welcome to Coastal Watch!

This is a Monthly Magazine produced with the reflection of Coastal Community on their life experience. It is released as part of the DHAN Foundation - Earth Journalism Network Project- Internews Project titled “Voice of Vulnerable”. This is the second edition of the Magazine titled “Coastal Watch”.

The articles in this magazine are not written by Journalist or Expert in the Media Field. The Articles are written by Community Journalism Volunteers trained by DHAN Foundation to write articles and promote community journalism in the coastal area.

The Coastal Watch carries around seven articles, which talks about how education acts like a light house for a fishermen, Rain water harvesting in coastal village, an article on Disaster preparedness, Global Warming, Ornithology. This issue also carries articles on village level festival which reflect the culture of the coastal community and also the self confidence of a fisher women.

Thanks in advance for your support!

Keep Read and Reflect....

Regards

Editorial Team

Coastal Watch

## உள்ளடக்கம்

1. கலங்கரை விளக்கமாய் கல்வி..! 1

2. உயிர்துளியான மழைநீரை சேமிப்போம் பயன்பெறுவோம் 3

3. பேரிடர் காலத்தில் செய்ய வேண்டியவை 6

4. இயற்கை தொழிற்சாலைனா அது மரம் தான்! ஆனால் ஒரு மரமும் புவி வெப்பமயமாக காரணமாய் இருக்குமா? 9

5. பறவையியல் 11

6. இதுதான் எங்கமக்களின் ஆடி திருவிழா!! 13

7. கணவர் இல்லை என்று சோர்ந்து விடவில்லை 15

# கலங்கரை விளக்கமாய் கல்வி..!

மு.சேதுபதி *

பொதுவாக கடலுக்கு செல்லும் மீனவர்களுக்கு கலங்கரை விளக்கங்ளே வழிகாட்டியாய் இருக்கும், இங்கு ஓர் மீனவருக்கு கல்வியே கலங்கரை விளக்கமாய் இருக்கிறது பாருங்கள்

இருபத்தைந்து ஆண்டுகளாக துன்பத்தை மட்டுமே அனுபவித்த ஒரு ஜீவனை காணவேண்டுமா? வெள்ளப்பள்ளம் கிராமத்திற்கு வாருங்கள். நாகைமாவட்டத்தின் ஓர் கடலோடிகிராமம். இங்குள்ள எல்லோருக்கும் போன்றே எங்களுக்கும் கடலே ஜீவ ஆதாரம். நான் பிறந்து 25 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டது. வழக்கம் போல் எல்லா ஆண் பிள்ளைகளைப்போல் என்னைதோலில் வைத்து ஊர் சுற்றவும், தோல் தட்டிபாராட்டவும் என் தந்தை இல்லை. முகமறியும் வயதுக்கு முன்பே மேலுலகம் சென்றுவிட்டார்.

இரு சகோதரிகளையும் சேர்த்து மூன்று தாயிடம் வளர்ந்தேன் என்று சொல்ல வேண்டும். தந்தை போன்றே தந்தையின் ஊரும் எனக்கும் கொடுத்து வைக்கவில்லை. விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பார்கள். மாமன் வீட்டில் இருபத்தைந்து ஆண்டுகளாக விருந்தாலியாகவே இருந்து வருகிறேன். என் மாமா நல்லவர் தான், ஆனால் மது அவர் மதியை மையல் கொண்டிருந்தது. அவருக்கு தொழில் கடல்நீரில் எங்கள் பிழைப்பு என்னாவோ கண்ணீரில் தான். நானும் மாமனுடன் கடலுக்கே செல்லலாம் என்று நினைத்ததுண்டு என் தாயின் ஆசை நான்; படித்து அரசு அதிகாரியாக வேண்டுமாம். கனவு காணும் உரிமை எல்லாருக்கும் உண்டல்லவே.

நானும் கனவுகண்டேன். அதற்கு முதலில் ஒருபிடிமானம் தேவையில்லையா? எங்கள் வாழ்விற்கு ஒருபிடிமானம் தேடினோம், மூத்த அக்காள் தூணானாள். என் மாமனுக்கு



* மு.சேதுபதி, வெள்ளப்பள்ளம், நாகை



துணைவியானாள். திருமண மேடையில் அவள் சிரித்ததை சின்னவயதில் பார்த்த நாபகம் எனக்கு. சில நேரங்களில் அவளிடம் செல்வதுண்டு நீ சிரித்தால் அழகாக இருக்கு அக்கா என்று அப்போது ஒரு சிரிப்பு சிரிப்பாள் செத்துவிடலாம் போல் இருக்கும். சந்தோசம் என்னவென்றே அறிந்திராத வயதில், இறக்கும் தருவாயில் இருக்கும் ஒருவனின் வாயில் தேன்துளிவிழுந்ததுபோல் என் அக்காவிற்கு பெண் குழந்தைபிறந்தது.

மங்கையாய் பிறந்திடவே நல்லமாதவம் செய்திடல் வேண்டுமென்ற கவிமணி இருந்திருந்தால் மாற்றி எழுதியிருப்பார். மதுவிற்கு பின் மனிதராய் இல்லாமலிருந்த என் மாமனை எதிர்த்துக் கூட பார்க்கமுடியாத ஒரு அவலநிலை எனக்கு. பெண்ணாய் இருந்தால் கண்ணீரால் சொல்லிவிடலாம், என் பல இரவுகள் கண்மூடாதுபாலாய் போனது பற்றி அந்த அழுக்கு தலையணையைக் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

வாழ்க்கையில் நம்பிக்கையை மட்டுமாவது நம்பி வாழவேண்டும் என்பார்கள், அது கூட வாழ்விழந்து போனது என் அக்காள் வாழ்வில், ஆழ்கடலில் தத்தளிப்பவனுக்கு கலங்கரை விளக்கின் ஒளி உயிர்தருவதை போல் என் உயிரை பிடித்திருந்தது மன்னிக்கவும் படித்திருந்தது என் படிப்பு. என் அம்மாவின் ஆசைக்காக நல்லா படிச்சேன். பண்ணிரெண்டாம் வகுப்பு தேர்வின் போது எல்லா மாணவர்களுக்கும் அதிக மதிப்பெண் மகிழ்ச்சியை தரும், எனக்கு பயத்தையும், வருத்ததையுமே தந்தது, குறைத்து வாங்கியிருந்தால் மாமாவுடன் கடலுக்கு போய் குடும்பத்திற்கு சம்பாதித்திருக்காலமே என்று தோன்றிற்று.

இந்நிலையிலும் என் தாயின் வற்புறுத்துதல் பேரில் கல்லூரியில் அடியெடுத்துவைத்தேன். கல்லூரியிணீல் நான் மட்டும் தனித்துதெரிவேன். ஏன் என்றால் நான் படிக்கமட்டுமே சென்றிருந்தேன். அரசுதேர்வு எது நடந்தாலும் உடனே தயாராக ஆரம்பித்தவிடுவேன். நல்ல மதிப்பெண்களுடன் கல்லூரி படிப்பையும் முடித்தேன். தமிழ்நாடு அரசு தேர்வில் தேர்ச்சி பெற்று, நல்லதொரு அரசு பணியில் சேர்ந்தேன். முதல் முறையாக என் அம்மாவின் கண்ணீரில் ஆனந்தத்தையும் பார்த்தேன்.

# உயிர்துளியான மழைநீரை சேமிப்போம் பயன்பெறுவோம்

கனிமொழி *

மண்ணக்கு
மேலே
உள்ள தண்ணீர்
உயிரினங்களுக்கும்
மண்ணுக்கு கீழே உள்ள
தண்ணீர் தாவரங்களுக்கும்.
மண்ணுக்கு அடியில உள்ள தண்ணீர்
தெய்வத்திற்குமாம்.
கடவுளுக்குனு இருக்கக் கூடிய தண்ணீரை
நாம எடுத்துட்டு இருக்கோனு யாருமே நினைக்கிறது
இல்லை.

நமக்கு தேவை தண்ணீர், அது எப்படி வருகின்றது என்று எல்லாம் எனக்கு தெரியாது. நான் தினமும் குழாயில் தண்ணி அடிக்கிறதால தண்ணீர் வருகின்றது, அதை நான் உபயோகிக்கன்மீீணீறன், அவ்வளவு தான். அது போதும் எனக்கு அப்படினு தான் நாம் எல்லாருமே நினைக்கிறோம். நாம எல்லாருமே ஒரு நாள் கூட தண்ணீர் இல்லாம வாடி முடியாது. அது நமக்கு நல்லவே தெரியும். ஆனா அந்த தண்ணி எப்படி கிடைக்கிறது, அதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றது அப்படினு நாம தெரிவதில்லை, நாமும் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. காரணம் எவ்வளவு அடிச்சாலும் தண்ணீர் வருது. அது எவ்வளவு நாளைக்கு வரும். வராத சூழ்நிலை ஏற்பட்டா என்ன பண்றது அப்படினு நாம நினைக்கிறதே இல்லை. அப்படியே நாம அந்த சூழ்நிலை பத்தி யோசித்தாலும் ஒன்றே ஒனறு தான் நமக்கு நினைவிற்கு வரும், அது போர்வெல். எவ்வளவு அடி இறக்;குறோமோ அந்த அளவுக்கு எனக்கு தண்ணீர் கிடைக்கும் இந்த மனநிலையில் தான் நாம எல்லாருமே இருக்கிறோம். ஆனால்; பணம் இல்லாதவர் நிலையைப் பற்றி யாருமே நினைத்து பார்பதில்லை, பார்க்கவில்லை. நாம் இப்போழுது பார்க்க போகின்ற ஊர் காவனூர் இது திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்தது கிராமம்.



* கனிமொழி, காவனூர், திருவாரூர்

என்னோட பெயர் ரவிச்சந்திரன், நான் தண்ணீர் இல்லாம வயலில் 3 ஆண்டுகளாக விவசாயத்தை விட்டுடேன். அதுக்கு அப்புறம் என்ன பண்றதுனு தெரியல அதனால் கொத்தனார் வேலைக்கு போனேன். ஆனா எனக்கு அந்த வேலை செட் ஆகவில்லை. அதுக்கு அப்புறம் நான் என்னோட நிலத்தை அடமானம் வச்சி போர்வெல் போட்டேன். போர்வெல் போட்ட அப்புறம் கரண்ட் வரவே ரொம்ப நாட்கள் ஆயிடுச்சி. அதனால சோலார் வைச்சி தண்ணீர் வரவச்சேன். ஆனா இத வச்சி 2 மாதத்திலேயே பக்கத்துல இருக்கக்கூடிய எல்லாருக்கும் தண்ணீர் வரலைனு சண்ட போட்டாங்க. அதுக்கு அப்புறம், நான் நீங்கள் எல்லாரும் என்னோட போர்ல தண்ணீர் பிடிச்சிக்கோங்கனு சொன்னேன் வீடுகளில் உள்ளவர்களுக்கு தண்ணீர் சும்மாவே பிடித்துக்கங்கனு சொல்லிட்டேன். ஆனா வயலுக்காக தண்ணீர் தேவைபடுபவர்களுக்கு 1 மணிக்கு 50 ரூபாய் வாங்குவேன். ஒரு நாள் செல்வம் என்பவர் வீடுகட்டுவதற்காக தண்ணீர் கேட்ட போது இதே மாதிரி 1 மணிக்கு 50 ரூபாய் என்று போட்டு 10 மணிக்கு 500 ரூபாய் கொடுத்தார். நான் போர் போட்டதால் தான் சுற்றிலும் தண்ணீர் வரவில்லையா என்று தெரியவில்லை, ஆனால் எல்லாருமே என்னைதான் குற்றம் சுமத்தினார்கள், அதனாலதான் வீடுகளுக்கு தண்ணீர் இலவசமாக கொடுக்கிறேன்.

இந்த போர் இறக்கியதால் நிறைய பயிர்கள் என்னால சாகுபடி செய்ய முடிகிறது. நான் யாரு கையையும் எதிர்பார்க்காத நிலை ஏற்பட்டுள்ளது. என்னால பாதிக்கபட்ட எல்லாருக்குமே நான் தண்ணீர் கொடுத்துக்கொண்டு தான் இருக்கிறேன். இப்போது நான் நல்ல நிலையில் இருப்பதற்கு காரணம் வயல் வேலைதான். இதனால் தான் என்னால் இந்த வேலையை கைவிட முடியவில்லை. இப்போ இன்னும் 2 மாதத்தில் நான் அடமானம் வைத்து நிலத்தை மீட்டுவிடுவேன்.

நாம் பூமியினுள் இருந்து எந்த அளவிற்கு தண்ணீர் எடுக்கிறோமோ அதே அளவிற்கு பூமியினுள் செலுத்த வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டியது.

மழை நீர் சேகரிப்பு தொட்டி கட்டி மழை நீரை சேகரித்ததால் மட்டுமே நமக்கு தேவையான தண்ணீரை நாம் யாரிடமும் கேட்காமல் நாமே தயார் பண்ணிக்கொள்ள முடியும். இங்கே புதுப்பள்ளி என்னும் ஊரில் மொத்தம் 2,000 வீடுகள் உள்ளது. அதில் மழைநீர் சேகரிப்பு தொட்டி 15 வீடுகளில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு தொட்டி எல்லா வீடுகளிலும் கட்டாயம் இருக்க வேண்டும் என்று அரசாங்க உத்தரவு. எனவே இப்பொழுது தான் இந்த திட்டம் நிறைவேற்றி வருகின்றனர். இது இன்னும் சில ஊர்களில் இந்த திட்டம் கொண்டு வரவில்லை. இப்பொழுது அதிகமாக தண்ணீர் இல்லாத இடங்களில் இது மாதிரியான திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கு. நாம தண்ணீர்; அதிகமாக எடுப்பது தவறில்லை ஆனால் மழைநீர் அந்த அளவுக்கு பூமியினுள் செல்ல வேண்டும். அதனால் எல்லாருமே மழை நீர் சேகரிப்பு தொட்டி கட்டாயம் கட்ட வேண்டும்.



# பேரிடர் காலத்தில் செய்ய வேண்டியவை



களஞ்சிய சமூக வானொலி குழு *

நமது களஞ்சியம் சமூக வானொலி குழு, சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்ட அலுவலர் திருமதி, உமாமகேஷ்வரி அவர்களுடன் ஒரு சிறப்பு நேர்க்காணல் நடத்தியது, நமது குழு நடத்திய நேர்க்காணலிருந்து.

வணக்கம் என் பெயர் உமாமகேஷ்வரி, சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்ட அலுவலர் நாகப்பட்டிணம் மாவட்டம். நாம பேரிடர் பற்றி பேச தொடங்கியதே, 2004ல் சுனாமி வந்ததுக்கு அப்பறம் தான் இயற்கை பேரிடர் ஏன் வருது, எப்படி வருகின்றது என்று நமக்கு தெரியாது, அதை நாம தடுக்கவும் முடியாது.

இயற்கை பேரிடரால் அதிகம் பாதிக்கப்படுவது பொருளாதாரம், உயிர் இழப்பு இத எப்படி நாம தடுக்கமுடியும், பொருளாதார இழப்பை கூட சரி செய்ய முடியும் ஆனா உயிர் இழப்ப எப்படி இடுகட்ட முடியும், ஆனா முன்னொச்சரிக்கை நடவடிக்கையுடன் இருக்கலாம். நம்ம நாகப்பட்டினம்

* களஞ்சிய சமூக வானொலி குழு

மாவட்டத்தை பெறுத்தவரை அதிகம் வருவது புயல், வெள்ளம், ஆன இப்ப வறட்சியும் வந்துருக்கு பேரிடர் என்பது இயற்கையாக வருவது நாம இயற்கைய தடுக்க முடியாது ஆன முன்னொச்சரிக்கையுடன் இருக்கலாம்.

பேரிடர் வருவதற்கு முன் எவ்வாறு முன்னொச்சரிக்கையுடன் இருப்பது, அதற்கு நாம என்ன செய்ய வேண்டும்- பேரிடர் வருவதற்க்கு முன் திட்டங்கள் இருக்கனும் அதாவது முதலில் ஒவ்வொரு தனிநபரும் திட்டம் வச்சிறுக்கனும் எவ்வாறு என்றால் இப்ப பேரிடர் வந்ததுனா முதல்ல என்ன பறிபோகும் உடைமைகள் அப்பறம் பொருளாதரம், உடைமைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு போகனும், அப்பறம் நான் வந்து வெளியூர்ல இருக்கேன்னா என்ன எப்படி தொடர்பு கொளகி;றது ஒரு வேளை என்னை தொடர்பு கொள்ள முடியவில்லை என்றால் மற்றொரு நபரை தயார்படுத்தி வச்சிருக்க வேண்டும், அவர் மூலமாக என்னைய தொடர்பு கொள்ளலாம். அடுத்தது நம்மளுடைய அனைத்து சான்றிதழ்களையும் ஸ்கேன் பண்ணிணீ இமெயில்ல வச்சிக்கனும் அப்படி இல்லை என்றால் இப்ப தான் இணையத்தில் நிறைய ஆப்ஸ் இருக்கு அது மூலமாகூட நீங்க வச்சிக்கனும்.

அடுத்து ஒரு குடும்ப அளவில் திட்டம் இருக்கணும் என்னான ஒரு குடும்பத்துல குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை இருப்பாங்க அவங்களுக்கு தேவையான மருந்துகள், உணவு பிரட், பிஸ்கேட், பால் பவுடர் இரண்டு நாட்களுக்கு தேவையான துணிகள் இதையொல்லாம் தயார வாங்கி பேக் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து கிராமம் அளவில் திட்டம் இருக்கனும் ஊர் தலைவர், அல்லது பஞ்சாயத்து பொறுப்பாளர்கள் இருப்பாங்க அவர்கள் அந்த ஊரில் மொத்தம் எத்தனை பேர் இருக்காங்க என்ற கணக்கு வச்சிறுக்கனும், பாதுகாப்பான என்னென்ன இடங்கள் இருக்கின்றது என்பதை முன்னாடியே தெரிஞ்சு வச்சிருக்கனும், பேரிடர் வருவதற்கு முன்பே எச்சரிக்கை செய்து தேர்வு செய்து வைத்திருக்கும் பாதுகாப்பான இடங்களில் மக்களை தங்க வைக்கனும்.

மாவட்ட அடிப்படையிலான திட்டங்கள் மாவட்ட யாட்சியர் அவர்களின் தலைமையில் அனைத்து அதிகாரிகளும் தயாராக இருப்பார்கள். நமது நாகப்பட்டினம் மாவட்டத்தில் 9 பாதுகாப்பு கட்டிடங்கள் 9 இடங்களில் இருக்கிறது அது மட்டும் இல்லாமல் பேரிடர் காலங்களில் மக்கள் தங்க நல்ல பாதுகாப்பான இடங்கள் கல்யாண மண்டபம், பள்ளிக்கூடங்கள் இது மாதிரி இடங்களை தேர்வு செய்து முன்பே வைத்துக் கொள்ள வேண்டும். அது மட்டும் இல்லாமல் பேரிடர் காலங்களில் கன் கூடுவதால் அங்கு முதலில் பாதிக்கப்படுவது சுற்றுப்புற சூழல் அதனால் முதலில் முறையான கழிப்பறை வசதிகள் இருக்கின்றதா என்பதை அறிந்து, கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அப்பறம் தண்ணீர், சுத்தமான தண்ணீர் இருக்கின்றதா என அறிந்து தண்ணீர் வசதியும் செய்து கொடுக்க வேண்டும்.

முதலில் மாவட்ட அலுவலகத்தில் இருந்து தாசில்தாருக்கு தகவல் அனுப்படும் அவர் வருவாய் அதிகாரி முலமாக கிராம அதிகாரிக்கு க்கு செய்தியினை அனுப்புவர், ஏற்கனவே ஒவ்வொரு கிராமம் அடிப்படையில் தன்னார்வாளர்களை தேர்வு செய்து அவர்களை ஐந்து வகைகளாக பிரித்து வச்சிருக்கோம் அதுல முன்னொச்சரிக்கை முதல் நிலை பொறுப்பாளர் இருப்பாங்க அவங்களுக்கு கிராம அதிகாரி மூலம் தகவல் அனுப்பபடும் அந்த முதல்நிலை பொறுப்பாளர் மக்களுக்கு தெரியப்படுத்துவர் அப்படி மக்களுக்கு ஒரு செய்தி தெரியப்படுத்தும் பச்சத்தில் மக்கள் எல்லாரும் பாதுகாப்பான இடத்துக்கு போகனும், நிறைய மக்கள் அலட்சியமாக இருப்பாங்க அப்படி

இருக்ககூடாது, ஏன் நான் இத சொல்றனா இப்ப கஜா புயல் வந்தப்ப சிலர் இப்படி தான் வீடுகளிலே இருந்து நிறைய பிரச்சனைகள் இருந்தது அதனால ஒரு செய்தி அரசிடம் இருந்து வருது என்றால் மக்கள் எல்லாரும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வது தான் நல்லது.

அதாவது வெள்ளம் வருவதற்கு முன்பு வடிகால்களை முதலில் சுத்தம் செய்ய வேண்டும். அப்பறம் வீட்டு பக்கத்தில் உள்ள பள்ளங்களை மண் கொட்டி நிரப்ப வேண்டும். கூரை வீடுகளாக இருந்தால் கூரைகளை கயிறு கொண்டு வறிந்து கட்ட வேண்டும் தாழ்வான பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும். கால்நடைகளையும் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

பேரிடர் காலங்களில் எந்த ஒரு தனிநபரும் வதந்திகளை பரப்பக் கூடாது. அரசு தரும் செய்திகளை அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும். அரசு தரப்பில் இருந்து வரும் செய்தியினை ஏற்று மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். பேரிடர் வருதோ இல்லையோ, பேரிடர் பற்றிய செய்தி கிடைத்தவுடன் அலட்சியப்படுத்தாமல் மக்கள் அணைவரும் பாதுகாப்பான இடத்திற்கு செல்வது தான் நல்லது அப்போதுதான் பேரிடர் காலங்களில் இழப்புகளை தவிர்க்க முடியும்.



# இயற்கை தொழிற்சாலைனா அது மரம் தான்! ஆனால் ஒரு மரமும் புவி வெப்பமயமாக காரணமாய் இருக்குமா?

சபரிநாதன் *

இந்த பூமியில வாழக் கூடிய எல்லா உயிரினங்களுமே நிலையே இல்லாத வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இந்த உலகததில் நாம எந்தவிதமான அடுத்த கட்டத்துக்கு போய்டு இருக்கிறோம் என்பதை நம்மால் உணர முடிகிறதா?. மனிதர்களாகிய நாமே நம்முடைய அழிவை நோக்கி போயகொண்டு இருககிறோம். இந்த தருணத்தில உலகத்தில் இருக்கக் கூடிய உயிர்கள் எதிர்கொள்ளக் கூடிய ஒரு மிகப்பெரிய பிரச்சனை புவி வெப்பமயமாதல், இதனால் பல மாற்றங்கள் தினம் தினம் ஏற்படுகிறது.

என் பெயர் ஸ்ரீதர், என்னோட ஊர் கொரடாச்சேரி, இப்போ புவிவெப்பமயமாதலை யாரும் கண்டுகொள்ளாத கவலைக்குரிய நிகழ்வாகதான் இருக்கு. இதுக்கு முக்கிய காரணமாக நான் பார்ப்பது மக்கள் தொகை பெருக்கம். இந்த உலகத்துல நாளுக்கு நாள் மக்கள்தொகை பெரிதாகிறது. மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் அளவும் அதிகமாகி கொண்டு இருக்கிறது. பூமியில் வெய்யிலின் தாக்கத்தால், குளிருட்டப்பட்ட அறையில்லாமல் வாழ முடியவில்லை, ஆனால் அதுவே பூமி வெப்பமடைய காரணங்களில் ஒன்றாக உள்ளது. ஒவ்வொரு தனிமனிதரும் குளிர்சாதன பெட்டி, குளிர்தான அறை, பயன்படுத்துவது, வாகனங்களை அதிகமாக பயன்படுத்துவது போன்றவற்றினால் பூமி எளிதில் வெப்பமடைகிறது. சாதாரணமாக சூரியனிடமிருந்து வெளி வர வெப்பத்தால் பூமியானது வெப்பம் அடைவதில்லை. பூமியில் பட்டு பிரதிபலிக்கும் வெப்பத்தினால தான் இந்த நிலை ஏற்படுகிறது. உதாரணமாக ஒரு செங்கல் வெப்பத்தை உள்வாங்கிறது, பின்பு அதை உடைக்கிறதனால அதன் வெப்பம் இரண்டாக பிரிந்து வெப்பத்தை அதிகமாக வெளிபடுத்துகிறது. பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவை தவிர்ப்பது, வாகன பயன்பாட்டினை குறைப்பது, எளிதில் மக்க கூடிய பொருட்களை பயன்படுத்துவது போன்றவற்றின்மூலம் இந்த வெப்பமயமாதலை குறைக்க முடியும்.



என்னோட பெயர் ரவிச்சந்திரன், சமூக நல ஆர்வலராக இருக்கேன், என்னோட ஊர் காரைக்கால். இந்தப் புவி வெப்பமயமாதல்

* சபரிநாதன், திருவாரூர் கலைகல்லூரி

என்பது இன்று நாம சந்திக்கிற முதல் பிரச்சனையாக இருக்கு. இதுக்கு காரணம் நாம சரியா சுற்றுச்சூழலை, கட்டமைப்புகளை பராமரிக்காமல் இருப்பது. கட்டமைப்பு என்பது மரம், மரம் சார்ந்த சூழல், நீர் மேலாண்மை இது எல்லாத்தையும் ஒழுங்குபடுத்த வேண்டும். இதனை செய்யத் தவறியதற்கான காரணம் நம்முடைய சுயநலம் என்றும் சொல்லலாம். தன்னுடைய பணி, தன்னுடைய வாழ்க்கை மற்றும் இன்று மனிதன் கடைபிடிக்கும் விரைவான வாழ்க்கை முறை நம்மை இதை செய்ய தடுக்கிறது. இதற்கான தொலைநோக்கு பார்வை நம்மிடம் இல்லை, பின்பு வாழ்வியலோடு சேர்ந்த விழிப்புணர்வு என்பது முற்றிலுமாக இல்லை.

வாழ்வியலோடு சேர்ந்த விழிப்புணர்வுக்கு உதாரணமாக நம்மோட முன்னோர் கடைபிடித்து வந்த ஒரு செயலை கூற நான் நெனைக்கிறேன். பொதுவாக திருமணங்களில் அரசாணி கொம்பு நடுதல் என்ற சம்பிரதாயம் இன்றளவும் கடைபிடிக்கப்படுகிறது. மணமக்கள் இரு குச்சி களுக்கு மஞ்ச கயிறு கட்டி பொட்டு வைத்து பூஜை செய்வாங்க. இன்று அது வெறும் புகைப்படத்திற்காக மட்டும் எடுக்கும் நிலையில் உள்ளது. அதற்கான உண்மையான அர்த்தம் திருமணமான மணமக்கள் அந்நாளில் இரு மரங்களை நட்டு வளர்க்க தொடங்குவார்கள். இதனால் மரங்களின் எண்ணிக்கை அதிகரித்து சுற்றுச்சூழலுக்கும் ஏதுவாக இருக்கும். சுற்றுச்சூழலை பாதுகாக்குறது மற்றும் நீர் மேலாண்மை ஊக்குவிப்பதன் மூலம் இந்த புவி வெப்பமயமாதலை குறைக்க முடியும்.

என்பெயர் தேவராஜ், என்னுடைய ஊர் ராமநாதபுரம். நூகப்பட்டணம் மாவட்டம், நம்ம வாழ்கைல பல பிரச்சனைகளை சந்தித்தித்துட்டு இருக்கோம். இதுக்கு எல்லாம் மேலா ஒன்னு புவி வெப்பமயமாதல், அதைப்பத்தி நாம சின்னதா கூட யோசிக்கிறதில்ல. நம்மோட வாழ்க்கை ஓட்டம் வேகமாவும், எண்ண ஓட்டம் வித்தியாசமாவும் இருக்கு. இந்தப் புவி வெப்பமயமாதலுக்கு முக்கிய காரணமாக நாம பாக்குறது நம்மோட அலட்சியம் தான். அதையும் தாண்டி புவி வெப்பமாதலுக்கு தீர்வு மரம் வளக்குறது தான். இருந்தாலும் சில மரங்கள் இருப்பதால தான் பூமியானது எளிதில் வெப்பமடைகிறது என்று நான் கருதுகிறேன். ஆம்! நம்ம ஊர் பக்கத்துல அதிக அளவு கருவ மரம் இருக்கு, இது தான் புவிவெப்பம் ஆவதற்கு முக்கிய காரணமா அமையுது. ஒரு கருவ மரம் காற்றில் உள்ள ஈரத்தை உறிஞ்சி எடுத்துக்குற தன்மைகொண்டது. அது எல்லாதயும் அழிச்சா தான் இந்த புவி வெப்பமயமாதலை நம்மால் தடுக்க முடியும். அதனால நம்மால முடிஞ்ச வரைக்கும் கருவ மரத்த அழித்து அதுக்கு பதிலா அதிகமா ஆக்சிஜனை வெளியிடுற மரங்களான புங்கை மரம், வேப்ப மரம், அரச மரம் இது மாதிரியான மரத்த அதிகமா வளர்த்து பிரச்ச னைக்கு நம்மால முடிவுக்கட்ட முடியும்.

புவி வெப்பமயமாதலால் பருவநிலை மாற்றங்கள் பல ஏற்படகின்றன. 2015 ல் மிகப்பெரிய வெள்ளத்தை சந்திச்ச நகரம் தான் சென்னை. அதே சென்னைதான் 2019 லையும் வரலாறு காணாத வறட்சியை சந்திச்சிக்கிட்டு இருக்கு. இதுவே இந்த காலநிலை மாற்றத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டு.

இயற்கை தொழிற்சாலைனா அது மரம் தான். மரம் தான் காத்த சுத்தப்படுத்தி உலக உயிர்களுக்குத் தேவையான ஆக்சிஜனை உற்பத்தி செய்கின்ற ஒரு உண்மையான தொழில் நுட்பமா இருக்கு. இந்த புவி வெப்பமயமாதலை தடுக்க நம்மால முடிஞ்ச எளிய மரங்கள வளர்க்க வேண்டு;ம். காற்றில் கார்பன் டை ஆக்சைடு அளவு அதிகமாறதனால புவியானது எளிதில் வெப்பமடைகிறது. இதனை தடுக்க நாம செய்ய வேண்டிய ஒரே செயல் மரங்கள் வளர்க்கிறது மட்டும் தான்.

மரங்கள்; காற்றை சுத்தப்படுத்தி ஆக்சிஜனின் அளவை அதிகமாக்கிறது.

மண்ணரிப்பை தடுக்கிறது.

நிலத்தடி நீரை பாதுகாக்கிறது.

மழைப்பொழிவு இருக்கும் இம்மரங்களை காரணமாக விளங்குகின்றன.''

இதனால் இந்தப் புவி வெப்பமயமாதலை கட்டுப்படுத்த நம்மால் முடிஞ்ச ஒரே வழி மரங்களை வளர்ப்பது மட்டும் தான்.

இயற்கை என்பது இறைவன் நமக்கு கொடுத்த வரம் அதை காப்பது நம் கடமை. வாருங்கள் கடமையை செய்வோம்.

# பறவையியல்

பி. சுந்தரவளவன் *



இவ்வுலகில் மனிதன் கண்டுகளிக்க கிடைக்கும் அதிசயங்கள் ஏராளம். அட்சயப்பாத்திரம் போல் அள்ள அள்ளக் குறையாத அதிசியங்கள் இருக்கின்றன. அருவி, காடுகள், மலைகள், கடல், அந்தி வானம் என இன்னும் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொரு விலங்கு மற்றும் பறவைகளின் செயல்பாடுகள் நம் நேரத்தை நம்மை அறியாமல் விழுங்கும் ஆற்றலுடையது. குறிப்பாக பறவைகள். பறவைகள் பறக்கும் என்பது தவிர, பறவைகள் பாடும் (குயில்), பறவைகள் நடனமாடும் (மயில்), பறவைகள் ஒற்றுமையைச் சொல்லித் தரும் (காகம்), பறவைகள் மனிதனால் கூட வடிவமைக்க முடியாத இல்லத்தை கட்டிக்கொள்ளும் (தூக்கானாங்குருவி) என்றுபல்வேறுசிறப்பம் சங்களை கொண்டது. பறவைகள் பற்றியறிவதே பறவை நோக்குதல். பறவை நோக்குதல் எனும் ரசனையான பணி. பறவை என்பதை எளிமையாக விளக்கலாம். உலகிலேயே சிறகு உடைய பிராணி, பறவைதான். நமது பெருவிரல் பருமனேயுள்ள மிகச் சிறிய ரீங்காரப் பறவை முதல், குதிரையளவு உயர்ந்து நிற்கும் மிகப் பெரும் தீக்கோழி வரை பறவைகளில் பல வகைகள் உண்டு.

பறவைகளைப் பார்த்து ரசிக்க, கண்களே போதும். இருப்பினும், பறவையினங்களின் தனித்தன்மைகளை உணர, பறவை நோக்குதல் மிக அவசியமாகிறது. பறவையைப் பார்த்து ரசித்துப் பழக மூன்று முக்கிய கருவிகள் தேவை. பனாகுலர் எனும் தொலைநோக்கி, குறிப்புப் புத்தகம், பறவைகளைக் கண்டுபிடிக்கும் கைநூல். தூரத்தில் இருக்கும் பறவைகளைத் தெளிவாக, நெருக்கத்தில் காட்டக்கூடிய பைனாகுலர் தேவை. பறவையினங்களைப் பார்த்து ரசிப்பவர் முதலில் சில நாட்களுக்காகவது உடனுக்குடன் பார்த்து தெரிந்துகொள்ளும் துணை நூல் ஒன்றை பயன்படுத்த வேண்டும். அவ்வாறு உதவக்கூடிய சிலப் புத்தகங்கள் - விஸ்லரின் இந்தியப் பறவைகளின் கையேடு (Popular Hand book of Indian Birds) சலீம் அலியின் இந்தியாவின் பறவைகள்.

* பி. சுந்தரவளவன், வருவாய் ஆய்வாளர், கீழ்வேலூர்

ஒரு பறவையை இனஞ்சுட்ட வேண்டுமெனில் நாம் பார்த்த பறவையின் பருமன், நிறம் ஆகியவற்றை மனதில் நிறுத்திப் பழக வேண்டும். நாம் பார்த்தது வெள்ளையும் கருப்பும் கலந்த பறவை என வைத்துக்கொள்வோம். எந்தப் பாகம் வெள்ளை? - தலையா? இறக்கையா? வாயா அல்லது அடிப்பாகமா ? அதன் அலகின் உருவம், நிறம், இவற்றை உடனே கூர்ந்து பார்த்துக் கொள்ள வேண்டும். அதுபோலவே அதன் காலின் நீளம்,வாலின் அமைப்பு, தலையில் கொண்டை அல்லது எழும்பிய சிறகுகள் என எல்லாவற்றையும் உடன் நோக்கிப் பதிவு செய்ய வேண்டும்.

ஒரு பறவை, இலைகளுக்குள் மறைந்து பறந்து விடுகிறது என வைத்துக்கொள்வோம். அப்போது அப்பறவை பற்றிய எல்லா விவரங்களையும் நாம் கவனித்திருக்க மாட்டோம். எனவே, ஒன்றிரண்டு முக்கிய பண்புகளை மட்டும் விரைவாக மனதில் பதித்துக்கொள்ள முயற்சிப்பது நல்லது. நம் ஞாபகத்தில் பலவற்றை வைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை நம்மிடம் இருக்கலாம். ஆனால் இரண்டு மணிநேரத்தில் பல நுண்ணிய குறிப்புகள், நிறங்கள், அளவு போன்றவை மனதிலிருந்து நீங்கி விடும் சாத்தியம் இருப்பதால் அவற்றை அவ்வபோது குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பெடுப்பதற்கான சிறு நோட் புத்தகம் ஒன்றும் பேனாவையும் கொண்டு செல்வது நல்லது.

ஒரு பறவையை வெகுநேரம் கவனிக்க வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பற்றிய பல குறிப்புகளை பறவையைப் பார்த்து பார்த்து விரிவாக உடனே குறிப்பேட்டில் குறித்து கொள்வது நல்லது.

பறவையின் கூப்பிடு குரல் அல்லது பாடுந்தன்மை மற்றொரு அடையாளமாகும். ஆனால் இது எல்லாப் பறவைகளிலும் சுலபமாக எழுதக் கூடியதல்ல. இருப்பினும், நீண்ட விசில், குவாக், குவாக் சத்தம், பறக்கும்போது கிளிக் என ஒலி எழுப்புதல் என சில ஒலிகளைக் குறிப்பெடுக்கலாம்.

புத்தகங்களும் படங்களும் பறவைகளின் நிறங்களைத் தனியாகக் காட்டினாலும் முதலில் பறவை பார்ப்பவர்கள் எல்லா நிறங்களையும் கண்டுகொள்வதில்லை. அதற்கு பழக்கம் தேவை. மிகப் பிரகாசமான சூரிய வெளிச்சத்திலும் சில குறிப்பிட்ட கோணங்களிலும் சில நிறங்கள் வேறுவிதமாகக் காட்சியளிக்கலாம். அதனாலேயே நிறங்களை மட்டும் வைத்துப் பறவைகளை இனஞ்சுட்ட நினைக்காமல் வேறு ஒன்றிரண்டு பண்புகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பறவை நோக்குதலில் சிறிது பழக்கப்பட்ட பின் ஒரு பறவையைப் பார்த்த மாத்திரத்தில் அது தெரியாத பறவையாக இருந்தாலும்கூட இன்ன குடும்பத்தைச் சேர்ந்தது என சொல்லிவிட முடியும்.

பறவையைப் பார்ப்பதில் ஈடுபடுகிறவர்கள் எல்லோருமே புதிய சாதனைகளை உண்டு பண்ணிவிட முடியும் என நினைப்பது தவறு. அது சாத்தியமல்ல. ஆனால் பலநாள் பறவை பார்ப்பதில் ஈடுபட்ட பிறகு பறவைகள் மீது உண்டாகும் நெருக்கமும் ரசிக்கும் தன்மையுமே ஒரு நிலையான பரிசுபோல ஆகி, மனதுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கிறது.



# இதுதான் எங்கமக்களின் ஆடி திருவிழா!!

**இராணியம்மா ***

விழாக்களுக்கு விருந்துகளுக்கும் பேர் பெற்றது தமிழர் பண்பாடு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலத்தினருக்கும் தெய்வங்களும் விழாக்களும் வேறு வேறு தன்மைகொண்டது. நிலத்திற்குறிய தெய்வங்களின் சிறப்பியல்பிற்கு ஏற்றார்போல் விழாக்களும் மாறுபடுகிறது. மக்களின் வாழ்வாதாரத்தை பொறுத்தும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நிலவுகின்றன. நெய்தல் நிலத்தின் கலச்சாரத்தையும் விழாக்களையும் பற்றி தெரிந்துகொள்;ள விழுந்தமாவடியின் மூத்த தலைமுறையினரான இராணியம்மாவிடம் செல்வோம்.

நூன் ராணியம்மா விழுந்தமாவடி வடக்கு மீனவர் காலணியில இருக்கேன். எனக்கு ஐம்பத்திநாலு வயசாகுது. எனக்கு விபரம் தெரிச்சநாள் முதல கடல பார்த்துக்கிட்டு தான் இருக்கேன். என் விட்டிற்கும்; கடலுக்கும் 40 அடி தூரம் தான் இருக்கும். என் இணைபிரியாதோழி அந்த ஆர்பரிக்கும் அழகு கடல், எனக்கு சில நேரங்களில் பொறாமையாகூட இருக்கும். என்னைப் போல் வயசாகி சோர்ந்து விடாமல் எப்போதும் துள்ளம் இளமையுடனே இருக்கிறாளே என்று, மற்றவர்களுக்கு கடலை பார்க்கும் போது ஒரு பூரிப்பு ஏற்படும், கடலை இரசிப்பதற்கு என்று சுற்றுலா வருவார்கள். எங்களுக்கு கடல் தெய்வம் மாதிரி, நான் எனது வீட்டின் வாசலில் நின்று என் தெய்வத்தை சோகமாக பார்த்தால் அது எனக்கு ஆறுதல் சொல்லும், சந்தோஷமாக பார்த்தால் அது எனக்கு மேலும் சந்தோஷைத்தை தரும். சிலர் கடலை பார்த்து பயப்படுவதும் உண்டு, நாங்க கடல் பக்கத்துல இருக்கிறதால எங்களுக்கு பயம் எதுவும் இல்லை.

கடலோர பகுதிகளில் விழாக்களுக்கு பஞ்சமே இருக்காது, குலதெய்வ விழாக்கள், ஊர் திருவிழா என மாதம் தவறாது இருந்து கொண்டே இருக்கும். ஆனால் எல்லாப் பகுதிகளிலும் கொண்டாடப்படும் ஒரே விழா ஆடி திருவிழா. ஆடி மாதம் என்றாலே அம்மன் கோவில் திருவிழாவும், கூழ் காய்ச்சி ஊத்துற திருவிழாவும் தான் அனைவருக்கும் ஞாபகம் வரும்.

* இராணியம்மா, விழுந்தமாவடி வடக்கு மீனவர் காலணி, நாகை



மீனவர் கிராமத்தில; ஆடித் திருவழா எப்படி இருக்குமுனு தெரியுமா. நான் சின்னபிள்ளையா இருக்கும் போது என் அம்மாக்கிட்ட எப்பமா கூழு ஊத்துவாங்கனு அடிக்கடி கேட்பேன். அது ஆடி மாசந்தானு சொல்லுவாங்க என் அம்மா. ஆடி பிறந்தாலே எனக்கு சந்தோசமா இருக்கும்.

இப்பெல்லம் ஆடி மாசம் பொறந்தவுடன் ரேடியோவெல்லாம் வச்சிருராங்க. ஆடி மாசம் தமிழ் மாசத்துல ரொம்ப விஷேசமா இருக்கும். இந்த ஆடி மாசம் தான் அம்மனுக்கு உகந்தமாசம்னு சொல்லுவாக, அதனால எங்க பகுதியில அம்மனுக்கு கூழ் காய்ச்சி ஊத்துறது ரொம்ப விஷேசமா இருக்கும். ஒவ்வொரு ஆடி வெள்ளிகிழமையும் எங்க பகுதியில் உள்ள மக்கள் சேர்ந்து கூழ் காய்ச்சி ஊத்தி ஒன்றாக சாமிகும்புடுவது வழக்கம்

ஆடி மாசத்துல கூழ் ஊத்துறதுக்கு இப்ப பல காரணம் சொல்லுறாங்க எங்களுக்கு தெரிஞ்ச தெல்லம் எல்லாரும் கூழ் குடிக்கனுங்குறது தான். எங்களுக்கு அப்பெல்லாம் கூழ் கூட சாப்பிடுறதுக்கு வீட்டில் இருக்காது. இங்க செய்யுற கூழ் ரொம்ப விஷேசமா இருக்கும் வீட்டுல செய்யறது மாதிரி இருக்காது ரொம்ப நல்லா இருக்கும். இப்போவும் என்ன மாதிரி வயசானபொம்பளைகதான்மொறயாகிண்டுறாக, இப்போ யாருக்கு கூழ் கிண்ட தெரியுது, கூழ் கிண்ட சொன்ன பச கிண்டவைக்குறாக. நூன் கிட்டத்தட்ட 25 வருசமா அம்மனுக்கு கூழ் கிண்டி ஊத்துறேன். இதுக்குன்னு சில முறையெல்லம் இருக்கு, எப்படி செய்யுறதுனா 1 படி கேழ்வரகு எடுத்து நல்லா நேம்பிட்டு காயவச்சு நல்லநைசா அரச்சு சூடோட வைக்காம ஆர வச்சு, கிண்டுற அன்னைக்கு அடுப்புல பெரிய புது பானையை வைச்சு அதில் தண்ணீர் ஊத்தி, தண்ணி கொதிச்சபிறகு கேழ்வரகுமாவை அதில் கரைச்சு ஊத்தனும், நல்லாவெந்து வரும் போது உப்புகொஞ்சமா போடனும், அதுக்கு அப்பறம் தேங்காய நல்லா துருவி அதிகமாக சேர்க்கனும்.

கூழ் பானையை அடுப்புல இருந்து எறக்கும் போது வேப்பளகட்டி இறக்கனும், அதுக்கு அப்பறம் அம்மனுக்கு படைக்கும் போது வாழை இலைபோட்டு அதுல அவுள், பொரிகடலை, பழங்கள், அம்மனுக்கு மஞ்சள் துணிகாச்சின கூழுனு எல்லாம் வச்சிசாமி கும்புடுவோம். ஆடி மாதத்தில் அடுத்து ரொம்ப விஷேசமுனா ஆடி அமாவாசை தான் இந்த ஆடி அமாவாசையை கடைபிடிக்க முக்கியமான காரணம் என்னான நம்ம வீட்டுல இறந்த முன்னோர்களுக்கு பிடிச்ச உணவு படையல் போடுறது தான். இந்த ஆடி அமாவாசையில், நாங்க முதல் நாளே வீடுயெல்லாம் சுத்த பத்தமா கழுவி சுத்தம் செஞ்சுடுவோம், அமாவாசை அன்னைக்கு காலையில் இருந்து பச்சைதண்ணி கூட குடிக்காம விரதம் இருந்து, பதினொறு வகை பொரியல், அதாவது பொரியல்னா, வெண்டைக்காய், புடலங்காய், பறங்கிகாய், பீர்க்கங்காய், அவரைக்காய், கத்தரிகாய், கொத்தவரங்காய், முட்டைகோஸ், உருளைகிழங்கு, கீரைனு இப்படி அடுக்கிகிட்டே போகலாம், இவை எல்லாத்திலேயும் தேங்காய் தூறுவல் இல்லாமல் இருக்காது. அத்தோட சாம்பார், ரசம், மோர், வடை, அப்பளம், பாயாசம் அப்புடினு எங்க முன்னோர்களுக்கு பிடிச்சகவுச்சி இல்லாத காய்கறி சமையல் செய்து முன்னோர்களுக்கு படையல் போட்டுட்டு, காக்கைக்கு சோறு வச்சிட்டு எங்களுடைய அமாவாசை விரதத்தை முடிப்போம்.

இதுல ஆம்பளங்க தான் முதல்ல விரதம் முடிக்கனும், படையல் போட்ட இலையில இருக்க சாப்பாடு எல்லோருக்கும் கொடுக்க மாட்டோம், விரதம் இருந்தவங்க மட்டும் தான் சாப்பிடுவாக. அந்த காலத்துல இருந்து இந்தகாலம் வரைக்கும் இது மாறம அப்படியேதான் இருக்கு. இன்னும் தலைமுறை தலைமுறையா மாறமத்தான் இருக்கும்.

# கணவர் இல்லை என்று சோர்ந்து விடவில்லை

வள்ளி *

விழுந்தமாவடி கடல் தண்ணீரில் பாதி என் கண்ணீராய் தான் இருக்கும். என் கதை கேட்கும் முன் மனதை திடப்படுத்திக்கொள்ளுங்கள் என்று செல்ல மாட்டேன், ஏனெனில் இது மீனவ பெண்களுக்கே உரிய சொத்து. இறைவன் படைப்பில் மிகவும் வஞ்சிக்கப்பட்டது பெண் மட்டுமே. மற்றவர்களைப் போலவே இரண்டு கால், இரண்டு கை, இரண்டு கண்களோடு சேர்த்து நிறைய கண்ணீரையும் கொடுத்து விட்டார். ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமண வாழ்க்கையில் பல கனவுகள் இருக்கும். என் கனவுகளை எல்லாம் கனவாகவே போகும் படி விட்டுவிட்டு, திருமணமான நான்கு ஆண்டுகளில் இறந்துவிட்டர்என் கணவர்.

பெண்ணாய் நான் பிறந்து படும்பாடு போதாது என்று நான்கு பெண்குழந்தைகள் வேறு. ஒரு பெண் குழந்தைகளை கரை சேர்ப்பது எவ்வளவு போராட்டம் என்று எல்லோருக்கும் தெரியும். என் குடும்பத்திற்கு என்று சொத்தோ, வசதியோ இல்லை அன்னைக்கு கடலுக்கு போய் வந்தால் மட்டுமே குடிக்க கஞ்சி என்ற நிலையில் அவரையும் இழந்த நான், இந்த நான்கு பிஞ்சு முகங்களையும் பார்த்து தான் உயிரோட வாழ நினைத்தேன். எனக்கு வீட்டை விட்டால் எதுவும் தெரியாது, எத்தனை நாள் தான் அரைவயிறு கால் வயிறுமாய் கிடப்பது.

சொந்தங்களிடம் சென்று கேட்க தன்மானம் இடம் தரவில்லை. ஏதேனும் வேலைக்கு செல்லும் அளவிற்கு படிப்பில்லை. ஒரு கைத்தொழிலும் தெரியாத நிலை. கடலன்னை மட்டுமே என் கண்ணுக்கு முன் நின்றாள்.

* வள்ளி, விழுந்தமாவடி, நாகை

என் வீட்டக்காரரின் சொந்தக்காரர் ஒருவரின் உதவியுடன் மீன் ஏலக்கடையில் மீன் வாங்கி வீடுவீடாக கொண்டு சென்ற விற்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு நாளிலும் சின்ன குழந்தைகளை வீட்டில் தனியே விட்டு விட்டு ஊர் ஊராய் கூடை சுமந்து மீன் விற்றேன்.

என் பெரிய பெண், என் பிள்ளைகளை பார்த்துக்கொள்ளும் இன்னொரு தாயானால், அவளுக்கு பள்ளிக்கூடத்தின் முகமே தெரியாது. ஒவ்வொறு நாளும் ஒவ்வொறு போராட்டமாய் கழிந்தது இந்த இளம் விதவையின் வாழ்க்கை. எங்கள் ஊர்களில் திடீரென்று மழை வரும் புயல் அடிக்கும் வாங்கிய மீனெல்லம் கருவாடு கூட போட முடியாமல் அழுகிபோகும். அன்று என் குழந்தைகளின் வயிறு காய்ந்துபோகும். விஷேச காலங்களில் எல்லோருக்கும் சந்தோசம் எனக்கு மட்டும் வருத்தம் அன்று மீன் விக்காதே என்று.

எங்க ஊர்கள்ல ஒரு பழமொழி இருக்கு பொண்ணு வளர்றதும் புடலங்கொடி வளர்றதும் தெறியாதும்பாக, இவ்வளவு போரட்டங்களுக்கு இடையே என் பெண்ணுக வளர்ந்து நின்னாதுக. அதுக வளர வளர எனக்கும் கவலையும் பயமும் சேர்ந்து வளர்ந்துச்சு, கடற்கரையிலே இருந்தும் எப்படி பெண்களை கரைசேர்க்க போறேனோனு. நாளும் கிழமையும் அது பாட்டுக்கு ஓடிக்கிட்டே தான் இருந்துச்சு, என் பொழப்பு அப்படியோ தான் இருந்துச்சு, பெரிய பொண்ணை நிறைய இடத்தில் இருந்த கேட்ட வந்தார்கள். நான் என்ன செய்வேன் இருக்குற காலத்துல ஒரு அச்சு பவுனுகூட போடலைனா எவன் கட்டுவான். என் குடும்ப சூழல் தெரிந்து வந்தவருக்கு மணமுடித்த கொடுத்தேன்.

அடுத்தெடுத்து வளர்ந்து நின்ற பொண்ணுகள வச்சுக்கிட்டு இருக்கக் கூடாதுனு ஒன்னொன்றாய் கரைசேர்த்தேன். என் பிள்ளைகளை படிக்க வைக்க முடியாவிட்டாலும் நல்ல முறையில் வளர்த்து யாரும் ஒரு குறையும் சொல்லாத மாதிரி திருமணமும் செய்து வைத்து விட்டேன். இப்போது என்னுடன் என் கடைக்குட்டி மட்டும் இருக்கிறாள். பண்ணிரெண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் அவளையாவது நல்லமுறையில் படிக்கவைக்க வேண்டும் என்பதே இப்போது என் கனவு. வாழ்க்கையில் பல போராட்டங்களை பார்த்த பிறகும் போராடும் குணம் தானாகவே வளர்ந்து விடுகிறது.



## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளை வறுமையை அகற்ற மக்கள் இயக்கங்களை உருவாக்கி, அவற்றை ஜனநாயக அடிப்படையில் செயல்பட வைக்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1997 அக்டோபர் 2 முதல் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஏழை மக்களின் வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்வதே தானம் அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஏழ்மையை அகற்றும் நோக்கில் களஞ்சியம், வயலகம், மானாவாரி விவசாயம், தகவலகம், கடற்புற வாழ்வாதாரம், பஞ்சாயத்து போன்ற அமைப்புகளின் வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து 14 மாநிலங்களில் 17 இலட்சம் மக்களுடன் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

## DHAN Foundation

DHAN Foundation is a development Organization working towards significant changes in the lives of the poor through innovative themes. It has been promoted with the objective of bringing highly motivated and educated young women and men to the development sector to work with the poor at grassroots. DHAN Foundation has come out with two scalable models Kalanjiam model of Micro Finance and Vayalagam model of Tank based watershed development. It is working on developing models on other programmes viz Tata Dhan Academy, Rainfed, Panchayat, ICT for poor. The new themes on Climate Change and Adaptation, Migration and Development, Youth and Development are on piloting in evolving models. The centres of DHAN Foundation play a vital role in integrating different programmes and themes across, in nurturing and processing the culture of collegiality, mutuality and solidarity.


<u>மேலும் தொடர்புக்கு</u>

**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302500, தொலைநகல்: +91 452 2602247
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org, இணையதளம்: www.dhan.org